# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 17/12/2022 | முதல் | 21/12/2022 |
| அறிக்கை எண் : | 100/ 2022 | வெளியீட்டு நாள் : | 16/12/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 29° - 34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°-24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.12.2022 முதல் 15.12.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-12-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/12 | 12/12 | 13/12 | 14/12 | 15/12 | தேதி | நாள்-4 17/12 | நாள்-5 18/12 | நாள்-5 19/12 | நாள்-4 20/12 | நாள்-5 21/12 |
| 0.1 | 3.5 | 12.7 | 26.3 | 1.7 | மழை (மி.மீ) | 0 | 0 | 2 | 4 | 6 |
| 34 | 33 | 33 | 34 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 30 | 31 | 30 | 29 | 29 |
| 24 | 23 | 23 | 23 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 20 | 21 | 20 | 19 | 19 |
| 7 | 6 | 7 | 5 | 2 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 8 |
| 81 | 87 | 90 | 81 | 87 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 78 | 59 | 74 | 83 | 55 | | 50 | 50 | 50 | 70 | 80 |
| 3 | 0 | 4 | 5 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 6 | 4 | 6 | 4 |
| வட மேற்கு | 0 | தென் கிழக்கு | தென்மே மேற்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 20, 21 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 19°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 முதல் 6 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**அடுத்த து வாரத்திற்கான ன விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (16 - 22 டிச 2022) :**

**மழைப்பொழிவு :**

16-12-2022 -22-12-2022: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சிறிதளவு கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

16-12-2022 -22-12-2022:

மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

16-12-2022 -22-12-2022: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள்** : தக்காளி, பருத்தி, கால்நடை.

### தக்காளி:

- ❖ தக்காளி பயிரில் புள்ளி வாடல் நோய் கட்டுப்படுத்த 5 மில்லி இமிடாகுளோப்ரைடு அல்லது ஊடுருவும் பூச்சிக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தேவையான அளவு தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ❖ பாதிக்கப்பட்ட செடிகளை நீக்கி அழித்துவிட வேண்டும். வேலிப் பயிர்களை வளர்க்க வேண்டும்

### பருத்தி:

- ❖ பருத்தியில் தண்டுத் துளைப்பான் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி என்ற அளவில் குளோரோடிரானிப்ரோல் மருந்தினை கலந்து தெளிக்கலாம்.
- ❖ ஒரு எக்டருக்கு 25 டன் என்ற அளவில் தொழு உரம் அல்லது வேப்பம் புண்ணாக்கு 250 கிலோவினை அடியுரமாக இட வேண்டும்

### கால்நடை:

- ❖ பொதுவாக மழைக்காலம் முடிந்து டிசம்பர், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மாட்டுப்பண்ணைகளில் ஹெமட்டோட்டியா ஈ அதிகமாக காணப்படும்.
- ❖ இது கடிக்கும் ஈ வகையாகும். இந்த ஈக்கள் மாட்டின் வயிறு, கழுத்து மற்றும் கண் பகுதிகளில் ஆயிரக்கணக்கில் கூட்டமாக காணப்படும்.
- ❖ ஆண், பெண் ஈக்கள் மாடுகளை தொடர்ந்து கடித்துத் இரத்தத்தை உறிஞ்சக்கூடியதாகும்.
- ❖ இந்த ஈக்களை கட்டுப்படுத்த கொட்டகைகளை அவ்வப்போது சுத்தம் செய்து சாணத்தை அகற்றி குப்பை குழிகளில் போட வேண்டும்.

- ❖ ஈக்களின் எண்ணிக்கை அதிகமாகும் பட்சத்தில் மாட்டின் மீது வேப்ப எண்ணெய்யை தடவி கட்டுப்படுத்தலாம்.